# ஆயர் மடல்...........

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே !!!

நமக்கு ஜீவ அப்பமாகவும், நித்திய ஜீவனாகவும் இருந்து, நம்மை பிரகாசிக்க செய்து கொண்டிருக்கிற திரியேக தேவனை, இந்த புதிய மாதத்தில் பிரியப்படுத்த, மகிமைப்படுத்த திருச்சபை மக்களாகிய உங்களை அழைக் கிறேன். கர்த்தர் நமக்கு கொடுத்த தாலந்துகளை எவ்வாறு பயன்படுத்துகிறோம்? ஓய்வுநாள் ஆராதனையில், மற்றும் திருச்சபையின் ஊழியங்களில் நம்முடைய பங்கு எப்படி இருக்கிறது? வருடாந்திர அறுவடை பண்டிகையில் என் பங்களிப்பென்ன? திருச்சபைக்கு புதிய விசுவாசிகளை கொண்டுவருவதில் என் பங்கு என்ன என்று யோசித்து, ஜெபத்தோடும், அர்ப்பணிப்போடும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களிலும் உற்சாகத்தோடு பங்கு பெற்று கர்த்தருடைய ஆசீர்வாதங்களை தக்கவைத்து கொள்ள உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

*இப்படிக்கு உங்கள் ஆயர்*
*அருள் திரு கிறிஸ்டோபர் ராஜேந்திரன்.*

## POINT TO PONDER

***Sow*** a thought and reap an ***action:***
***Sow*** an action and reap a ***habit:***
***Sow*** a habit and reap a ***character:***
***Sow*** a character and reap a ***destiny.***

# MEDITATION (தியானம்)

தியான வசனம்: Ephesians- எபேசியர் 4:11-16

அன்புக்குரியவர்களே ,

பரிசுத்த பவுலின் சிறை நிரூபங்களில் ஒன்றான இதில் அன்றைய எபேசு நகர திருச்சபைக்கு( இன்றைய துருக்கி பகுதி) கி பி 61-62 கால கட்டத்தில் எழுதப்பட்டது. இது Queen of Epistle, Crown of glory of new testament என்று வருணிக்கப்படுகிறது .கிறிஸ்துவின் சரிரமாகிய சபையின் மேன்மையை இந்த பகுதியில் வாசிக்கின் றோம். இது நமக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். கிறிஸ்துவின் சபை என்பது ஒரு புதிய மனுஷன் (எபேசியர் 4:24).இது கிறிஸ்துவின் பரிபூரணத்தை (4:11) போல திருச்சபை விசுவாசிகள் நடத்தை இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.கிறிஸ்துவுக்குள் ஒரு நிறைவான வளர்ச்சியை நோக்கி ஒவ்வொரு விசுவாசி யும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதுதான் தேவனுடைய திட்டமாக இருக்கிறது. So the primary motive of the church ministry is Equip each and every member of CSI Alain church. ஒவ்வொரு விசுவாசி யையும் Equip பண்ணுவது தான் இந்த ஊழியத்தின் நோக்கம். ஒரு மிலிட்டரி போர்வீரனை equip செய்ய எவ்வளவு கடுமையான பயிற்சி கொடுக்கப்படுகிறது? அதுபோல ஒவ்வொரு விசுவாசியும் பல்வேறு ஆவிக்குரிய பயிற்சிகளை திருச்சபையில் கற்று கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கிறிஸ்துவின் பரிபூரணத்தை நோக்கி, புதிய ஸ்ருஷ்டியாக வளர்ச்சி அடைய முடியும்.

நம் திருச்சபையில் இந்த வெளிநாட்டு சூழலில் எப்படிப் பட்ட ஆவிக்குரிய பயிற்சிகள்? நமக்கு சாத்தியம் என்பதை நாம் இணைந்து சிந்திக்க அழைக்கப் படுகிறோம். மாதத்தில் ஒருமுறை உபவாச கூட்டத் திற்க்கே நம்மால் வரமுடியாத பொழுது? நாம் எப்படி ஆவிக்குரிய பயிற்சிகளை சிந்திப்பதற்கு நேரம்.ஆதலால் இந்த மாதத்தில் நம்முடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி, திருச்சபையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு நாம் செயல் பட வேண்டும். அப்பொழுது தான் நாம் நம்முடைய இலக்கை அடைய முடியும். நம்முடைய இலக்கு என்பது Our Goal should be the Entire Body of the Church will grow towards Unity, Maturity and Chrirst - likeness (Ephesians 4 :12b - 13 ) as NEW MATURE MAN OR WOMAN IN CHRIST. ஒரு விசுவாசியின் பரிபூரண ஆவிக்குரிய வளர்ச்சி என்பது உண்மையானால் திருச்சபைடயின் ஒட்டு மொத்த வளர்ச்சி என்பது உண்மையாகும் . (Individual Spiritual Maturity leads towards Corporate maturity as a Church). நம்முடைய திருச்சபை உறவுகளை கட்டிக்காக்க நாம் என்ன முயற்சி எடுக்கிறோம் ?The world should see CHRIST IN CHURCH . The CHURCH in The World is JESUS CHRIST in THE WORLD .நாம் இயேசுவை இந்த உலகிற்கு காட்ட அழைக்கப் பட்டவர்கள். Let us show glimpse of Christ through our mature conduct.

இப்படிக்கு உங்கள் ஆயர்,

அருள் திரு எம். கிறிஸ்டோபர் ராஜேந்திரன்

## *Project for the congregation .*

***Bible Test :*** *Meditate on Genesis 3 :1 - 24 and write your own reflections .*

***Last month reflections by***

***Junior school project :*** *PICTURIZE THE GARDEN OF EDEN*

*Well done Children. God Bless You All.*
*Children those who submitted the project will be Awarded.*

***Youth project :*** *What made Joseph became great Man in Egypt .*

*LAST month project was done nicely by Herchil Harish*

***Women's Fellowship project*** *: Study about Prudent vs Foolish Wife for discussion .*

***Men's Fellowship*** *: Study about THE leadership qualities OF Moses for discussion .*
*LAST month presentation by Mr Melbin Paul was excellent .*

## WOMEN FELLOWSHIP

நமது திருச்சபையின் பெண்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கிற ஒரு அமைப்புதான் பெண்கள் ஐக்கிய சங்கம் . இந்த அமைப்பில் 35 வயதுக்கு மேல் உள்ளவர்கள் உற்சாகத்தோடு பங்குபெற்று , அர்ப் பணிப்போடு செயல் படும்போது ,நமது திருச்சபை வளர்ச்சி அடைந்து கனிகளை பிறப்பிக்கும். ஒரு விசுவாச வீட்டை கட்டுகிற பணியில் பெண்களின் பங்கு எவ்வளவு

முக்கியமோ, அவ்வளவு முக்கியம் பெண்களின் பங்கு திருச்சபையில். இதை நமது திருச்சபையில் உள்ள ஒவ் வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெண்கள் தங்கள் தாலாந்துகளை, திறமைகளை, கர்த்தர் நமக்கு ஆசீர்வாதமாய் கொடுத்த ஆவிக்குரிய வரங்களை, கனிகளை கண்டு கொள்ளவும், அவைகளை தேவ நாம மகிமைக்கென்று பயன்படுத்தவும், நமக்கு உதவுகிற அமைப்பு தான் பெண்கள் ஐக்கியம். ஆதலால் தயவு செய்து நாம் மாதத்திற்கொரு முறை தவறாமல் கலந்து கொண்டு ஒரு ஆவிக்குரிய வளர்ச்சியின் பாதையில் மகளிர் ஐக்கியமாக பயணிப்போம் .

இப்படிக்கு

Ayyaramma, Angel.C

## *செயலரிடமிருந்து........*

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற நமது திருச்சபை யின் அனைத்து ஊழியங்களையும் தேவன் அதிகமாக ஆசீர்வதித்து தந்தார் அதற்காக அவரைத் துதிக்கிறேன்.

வருகின்ற நவம்பர் மாதம் 10 ம் தியதி நமது திருச்சபை யின் வருடாந்திர அறுப்பின் ஸ்த்தோத்திர பண்டிகையை ஆசரிக்க ஆயத்தப் பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த பண்டிகை நிறப்பாக நடைபெற தேவ ஆசீர்வாதம் ஒவ்வொரு ஆயத்தங்களோடும் நிறைவாய் காணப்பட இறைவனை வேண்டுவோம். நாம் யாவரும் உற்சாகத்தோடு இணைந்து செயல்படுவோம் தேவன் ஆசீர்வதிப்பார்.

கடந்த மாதம் 14ம் தியதி ஆயரம்மா சுகத்தோடு கூட வந்து சேர தேவன் கிருபை செய்தார். அவர்கள் இங்கு வந்து சேர்வதற்கு உறு துணையாய் இருந்து செயல் பட்ட ஒவ்வொரு வருக்கும் என் நன்றி களை உரித்தாக்குகிறேன்.

கடந்த மாதம் 22 ம் தியதி **Rev. R. Ranjit Suthir**, Sharjah CSI போதகர் அவர்கள், சபை குழு அங்கத்தினரோடு நமது ஆராதனையில்

கலந்து கொண்டு சிறப்பு செய்தியும் தந்தார்கள். அது நம் அனை வருக்கும் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்திருக்கும் என்று நம்புகிறேன் மேலும் புதிதாய் இந்த தேசத்தில் தமது திருப்பணியை ஆரம்பத்திருக்கிற அவர்களின் பணியையும் அத்திருச்சபை யையும் தேவன் அபரிதமாய் ஆசீர்வதிக்கும் படியாய் ஜெபிப்போம். வரும் நாட்களிலும் நாம் திட்டமிட்டுள்ள எல்லா காரியங்களையும் நிறைவாய் செய்து முடிக்க தேவன் தாமே கிருபை புரிவாராக. ஜேபிப்போம், இணைந்து செயல்படுவோம்.

**கிறிஸ்துவின் அன்பில்.**
*M.Nesamony*

# தேவ அன்பு

**"தேவ அன்பு நம்முடைய இருதயங்களின் ஊற்றப்பட்டிருக்கிற படியால், அந்த நம்பிக்கை நமமை வெட்கப்படுத்தாது" ( ரோ 5:5)**

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது அன்பைக்குறித்து அறிவதும் விசுவாசிப்பதுமட்டும் அல்ல. அதனை அனுபவிப் பதுதான் ஆவிக்குரிய வாழ்க்கை. அநேகா் தேவ அன்பை அதிகமாக அறிந்து விசுவாசித்தாலும் அவர்களிடம் அன்பு வெளிப்படுவதை காண முடியாது. ஏனென்றால் அவர்கள் இன்னும் அகத்தில் அன்பு ஊற்றப்பட்டுள்ளதை உணர்ந்து அதனை உள்ளான இருதயத்தில் அனுபவிக்கவில்லை அன்பை அனுபவிக்காதவர்கள் பிறரிடம் அன்பு கூருவது எளிதான காரியமல்ல.

தேவ அன்பை நம்முடைய ஆத்துமாவின் ஆழங்களிலே உணரும் போது தான் நம்முடைய வாழ்க் கையில் மாற்றங்கள் நிகழ ஆரம்பிக்கிறது. அன்பு உணரப்படும் போது தான் ஆண்டவரை நேசித்து அவருக்கு பிரியமான விதமாக வாழ்வதற்க்கான ஊக்க விசையும் உள்ளான பலமும் கிடைக்கிறது. ஆத்துமாவில் அல்லது இருதயத்தின் ஆழத்திலே தேவ அன்பின் சுவையை அனுபவிக்கும் போதுதான் பிறரையும் நம்மைப் போல

நேசிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அதனை செயல்படுத்த தேவையான வல்லமையும் வருகிறது.

தேவ அன்பு தங்களுக்குள் ஊற்றப் பட்டதை உணர்ந்து கொண்டவர்கள் அதற்க்கு பின்னால் தேவன் நேசிப்பதின் அடையாளங்களை வேறெந்த நன்மைகளின் அடிப்படையிலும் காண விரும்ப மாட்டார்கள். ஏனென்றால் அவர் களுக்குள் ஊற்றப்பட்ட தேவ அன்பே தேவன் அவர் களை நேசிப்பதை உணர்ந்து உறுதிப்படுத்த போதுமா னதாக உள்ளது. பரிசுத்தஆவியின் மூலமாக ஊற்றப்பட்ட தேவஅன்பு நம்முடைய ஆவியில் இணைந்து. கர்த்தர் நம்மை நேசிப்பதை தொடர்ந்து உணர்திக் கொண்டேயிருக்கும்.

தேவ அன்பு ஊற்றப்படுதல் என்பதும் தேவ அன்பை ருசித்தல் என்பதும் ஒரு சிலருக்கு மட்டும் நேரிடும் விஷேசித்த அனுபவங்கள் அல்ல. ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்கின்ற ஒவ்வொரவ ருக்கும் ஆண்டவர் இலவசமாகத் தருகின்ற ஒரு பொதுவான அனுபவம் ஆகும்.

ஒருவன் தன்னை தேவனுக்கு முன்பாக பாவி என்று உணர்ந்து. அந்த பாவம் நீங்கி பரிசுத்தமான ஒரு வாழ்க்கையை பெறும் விதமாக. ஆண்டவாகிய இசேுவை இருதயத்தில் ஏற்றுக் கொள்ளும்போது, இந்த அனுபவத்திற்க்கான வாசல் திறக்கப்படுகிறது. ஆண்டவர் நம்முடைய பாவங்களை மன்னித்து தேவனுடைய பிள்ளகளாக ஏற்றுக் கொண்டதை உறுதி செய்யும் விதமாகவே பரிவுத்தாவியை அளிக்கின்றார். அந்த பரிசுத் தாவிதான் நமக்குள் தேவ அன்பை அனுபவிக்க நமக்கு உதவி செய்கின்றது. ஆம். ஊண்மையான மனந்திரும்பு தலுக்கு வந்து இரட்சிப்பின் அனுபவத்தை அடைகின்றவர்கள், தேவ அன்பை தங்களுக்குள் உணர்ந்து அனுபவிக்கும் ஆசீர்வாத நிலைக்கு வருகின்றனர்.

அன்பானவர்களே! நாமும் நம் பாவ குணங்களை களைந்துகிறிஸ்துஎன்னும் தேவ அன்பை பற்றிக்கொள்வோம்.

**நெல்சன் சோபித ராஜ்**

# கனி கொடுப்பது எப்படி?

ஆன்மீக வாழ்க்கை அல்லது ஆவிக்குரிய வாழ்க்கை என்பது தெய்வீக நற்குணங்களால் பிரதிபலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தெய்வீகத்திற்கு ஏற்ற குணாதிசயங்களும், சுபாவ நிலைகளும் ஒரு மனிதனிடம் காணப்படாவிட்டால், அவனுடைய ஆன்மீக பயணம் சரியான துவக்கங்களைக் காணவில்லை என்பதே உண்மையாகும்.

**மனிதர்கள் நம்முடைய நற்குணங்களைக் கண்டு தேவனை புகழ்ந்து பேசுகின்ற அளவிற்கு, அவை அவர்களுக்கு முன்பாக பிரகாசிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்** (மத்.5:16). நற்குணங்களால் ஒரு மனிதன் பிரகாசிக்காவிட்டால், அவன் இன்னும் இறைவனற்ற இருளிலிருந்து வெளியே வரவில்லை என்பதே பொருள்.

நற்குணங்களாலும் உயர்ந்த இயல்புகளாலும் நாம் பிரகாசிக்கா நிலையில், நம்முடைய ஆராதனைகள், மார்க்க நம்பிக்கைகள், ஆன்மீகச்செயல்கள் யாவுமே வீணானவைகள். ஏனென்றால் உயர்ந்த சுபாவரீதியான வாழ்க்கை இல்லாத நிலையில் மற்றவை எதனாலும் தேவன் மகிமைப்படு வதில்லை. **“நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினாலே தேவன் மகிமைப்படுவார்”** (யோவா.15:8) என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கூறினார்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது வெறும் கனி கொடுக்கும் ஒரு அனுபவமல்ல. அது மிகுதியான கனிகளை கொடுக்கும் ஒரு அனுபவமாகும். அதாவது நற்சுபாவங்களாலே நம்முடைய கிறிஸ்தவ அனுபவம் அடையாளப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இது எளிதான ஒரு விஷயம் அல்ல. கனிகொடுக் கின்ற அல்லது தெய்வீக நற் சுபாவங்களைக் கொண்டி ருக்கும் அனுபவம் என்பது இயேசுவோடு நிலைத்திருத்தல் அல்லது இயேசுவோடு இணைந்திருத்தல் என்ற அனுபவத்தின் வாயிலாகவே ஏற்படும்.

எனவே தான் இயேசு தம்மை ஒரு திராட்சை செடிக்கும், தம்மைப் பின்பற்றி வருகின்றவர்களை திராட்சை கொடிக்கும் ஒப்பிட்டு

பேசினார். திராட்சை செடியும் கொடியும் ஒன்றாக, சரியாக இணைந்திருக்கின்ற அந்த பிணைப்பின் மூலம் திராட்சை செடியில் உள்ள சத்து கொடிக்கு வந்து சேருவதால் அது நிறைய கனிகளைக் கொடுக்க முடிகிறது.

அதுபோலவே இயேசு கிறிஸ்துவோடு நாம் ஒட்டி, பிணைந்து ஒன்றாயிருக்கின்ற ஒரு ஆன்மீக செயலின் வாயிலாகவே, இயேசுவிடம் உள்ள தெய்வீகத்தன்மைகளும், வல்லமைகளும் நம்மிடம் வந்து சேர்ந்து சிறந்த குணாதிசயங்களையுடையவர் களாக நம்மை மாற்றுகின்றது. செடியாகிய இயேசுவோடு, கொடிகளாகிய நமக்கு போதிய பிணைப்பு இல்லாவிடில் நாம் நற்சுபாவங்களை உடையவர்களாக மாற முடியாது. ஆனால் இயேசுவோடு நாம் இணைந்திருக்கின்ற அல்லது இயேசுவோடு கலந்திருக்கின்ற ஒரு நிலையை நாம் எதன் மூலம் அடைய முடியும்? நம்மையும் இயேசுவையும் இணைத்து வைக்கின்ற சக்தி எது?

அதுவே ஜெபம். ஜெபம் தான் நம்மையும் இயேசுவையும் ஆவிக்குள் இணைத்து வைக்கின்றது. இயேசுவோடு நம்மை இறுகப் பிணைக்கின்ற ஒரு கயிறாகவே ஜெபம் விளங்குகிறது. வலிமையான ஒரு ஜெப அனுபவத்தை தொடர்ந்து கொண்டிராத எவரும் இயேசுவோடு நீடித்திருக்க முடியாது. ஒருவருக்கொருவர் நன்கு பேசிப்பழகி ஐக்கியமாயிராத கணவன்-மனைவி நன்றாக வாழுகிறார்கள் என்று கூற முடியாது.

ஒருவருக்கொருவர் போதிய பேச்சு வார்த்தைகளைக் கொண்டிராத இருவர் நல்ல நட்பு றவுடன் இருக்கிறார்கள் என்று கூற முடியாது. அதுபோல தேவனோடு பேசிக் கொண்டிருக்கின்ற ஒரு அனுபவமாகிய ஜெபம் போதிய அளவு இல்லா விட்டால் நம்முடைய ஆன்மீக வாழ்க்கை நன்றாக வாழ்கிறது என்று கூற முடியாது. நன்றாக வாழாத நிலையில் அங்கே நற்குண விளைவுகளைக் காண முடியாது.
ஒரு கொடி தொடர்ந்து கனி கொடுப்பதற்கு ஒவ்வொரு நாளும் செடியை சார்ந்தே இருக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. அது செடியோடு கடந்த காலத்தில் எவ்வளவு அதிகமாக பிணைந்திருந்தாலும், இன்று அந்த பிணைப்பிற்குள்ளிருந்தால் தான் கனி கொடுக்க இயலும்.

அது போல இயேசுவோடு ஒன்றாயிருக்கின்ற ஒரு நிலையின் மூலமாகத்தான், தேவனுக் கேற்ற நற்குணங்களை நாம் பிரதிபலிக்க முடியும். இந்த ஒன்றாயிருக்கிற அனுபவத்தை செயல் படுத்தி


உண்மையாக்குகின்ற வல்லமையான சக்தி ஜெபம் ஆகும். எனவே ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் நம்மை ஈடுபடுத்தி இயேசுவோடு பிணைந்திருக்கின்ற அனுபவத்தை அனுதினமும் புதுப்பித்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

சில நேரங்களில் நாம் ஜெபத்தில் மன்றாடி கேட்கின்ற சில நன்மைகள் நமக்கு தரப்படாமல் போவதுண்டு. நாம் ஆசித்த சில விஷயங்கள் நடக்காமல் போவதுண்டு. ஆயினும் அதற்காக ஜெபித்த நேரங்கள் வீணானவைகள் அல்ல. ஏனென்றால் ஜெபங்கள் நமக்கும் தேவனுக்கும் இடையே ஒரு வலிமையான இணைப்பை தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறது. அதன் விளைவாக தேவனுடைய தெய்வீகத் தன்மைகள் நமக்குள் வந்து கொண்டேயிருக்கின்றன. அங்கே நாம் கனி கொடுக்கும் சத்துடையவர்களாக மாறிக் கொண்டே யிருக்கிறோம். எனவே தேவனுக்கேற்ற கனிகளைத் தரும் கொடிகளாக தொடர்ந்து விளங்குவதற்கேதுவாக ஜெபங்களில் நம்மை தினமும் ஈடுபடுத்த வேண்டியது மிகவும் தேவையாகிறது.

*M.Nesamony*

# Children's Place

## CARTOON OF THE MONTH




# Jesus the Bread of Life



"I am the living bread that came down from heaven. If anyone eats of this bread, he will live forever. This bread is my flesh, which I will give for the life of the world." John 6:51 (NIV)

Enter the correct words in the boxes based on the shape of the letters.




| | | | |
|---|---|---|---|
| bread | listen | truth | everlasting |
| heaven | learn | believe | life |




**Jesus is the only way**

# Children who did their job

1. Annlin Sophia Nelson
2. Angelin  Sophia Nelson
3. Dennis Roger
4. Diniya Sunshine
5. Johan Sanjo
6. Joshikha Varshni
7. Joshua Koshy
8. Jesvin Selvakumar
9. Jrremiah Alan
10.Jonathan Asher
11.Shelbino Paul

## Well Done Children

Children this is for you to colour



# True Gospel

The true gospel is the one that enables us to be free of our sins completely, once and for all when we believe in it. The power of the gospel of God is that of dynamite.

The gospel of God is that, "Jesus Christ settled the debt for the debtor (sinner), who cannot possibly settle his own debt." The reason for calling this gospel 'dynamite' is because when we had to die for our sins and go to hell to be judged, the Son of God became the sacrificial offering for us in order to blot out all our sins.

He came to this world and took on all the sins of the world through His baptism in the Jordan and washed away all our sins forever.

He paid the wages of our sins by taking away all our sins with His baptism in the Jordan and by dying on the Cross. Jesus blew up all the sins of the world like dynamite with His baptism and blood. This is the true gospel.

The true gospel is that Jesus came to this world and by being baptized and bleeding on the Cross, saved all those who believe in Him.

As it is written in 1 John 5:6, "This is He who came by water and blood-Jesus Christ; not only by water, but by water, and blood. And it is the Spirit who bears witness, because the Spirit is the truth."

# வேத வினா விடைப் போட்டி

**(ஏசாயா 51 முதல் 66 வரை)**

1. நகரத்திலிருந்து கேட்கப்படும் சத்தம் எது?
2. யார் கொள்ளையாகிறான்?
3. எரிகிற தீவட்டியைப்போல வெளிப்படுவது எது?
4. என் கிருபை உன்னைவிட்டு விலகாது என்பது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமா? இல்லையா?
5. உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும் என்று சொன்னது யார்?
6. கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களுக்கு அவர் செய்பவைகளை கண்டது யார்?
7. தங்களை பட்ட மரமென்று சொன்னவர்கள்?
8. கர்த்தரின் நாமம் எப்படி தூஷிக்கப்படுகிறது?
9. காத் என்பது இஸ்ரவேலின் 12 கோத்திரங்களில் ஒன்று. சரியா? தவறா?
10. நதியைப் போல பாய்வது எது?

***குறிப்பு***: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு "நவம்பர்" மாதம் 20 ம் தேதிக்கு முன் ஆயருக்கு அனுப்பி வைக்கவும்.

## செப்டம்பர் மாத சரியான விடைகள்

1. பைசோன், கீகோன், இதெக்கேல், ஐபிராத்து (ஆதி.2:11-14)
2. சுடரொளிப்பட்டயம் (ஆதி.3:24)
3. காகம், புறா (ஆதி.8:7-8)
4. வானவில் (ஆதி.9:13-14)
5. ஆபிரகாம் (ஆதி.12:7)
6. சாலேமின் ராஜாவாகிய மெல்கிசதேக் (ஆதி.14:18,19)
7. லோத்தை மீட்க (ஆதி.14:14)
8. எலியேசர் (ஆதி.15:2)
9. மம்ரே (ஆதி.13:18)
10. சோதோமின் ராஜா (ஆதி.14:21)

**கடந்த மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதினவர்கள்.**

1. திருமதி. பிப்லின் நெல்சன்
2. திருமதி. ஜெயின் ராஜவேல்
3. திருமதி. ஜெயந்தா ஜாண்
4. திருமதி. அனிதா ராஜன்
5. திருமதி.. ஜோனிஷ் ஹெர்சில்
6. திருமதி. எபென் A..பிரசாத்.
7. திருமதி. சிந்துஜா சதீஷ்குமார்.

# GOD'S VOICE

*The Bible records God speaking audibly to people many times (Exodus3:14; Joshua 1:1; Judges 6:18; 1 Samuel 3:11; 2 Samuel 2:1; Job 40:1; Isaiah 7:3; Jeremiah 1:7; Acts 8:26; 9:15 – this is just a small sampling). There is no biblical reason why God could not or would not speak to a person audibly today.*

*With the hundreds of times the Bible records God speaking, we have to remember that they occur over the course of 4,000 years of human history. God speaking audibly is the exception, not the rule. Even in the biblically recorded instances of God speaking, it is not always clear whether it was an audible voice, an inner voice, or a mental impression.*

*God does speak to people today. First, God speaks to us through His Word (2 Timothy 3:16-17). Isaiah 55:11 tells us, "So is my word that goes out from my mouth: it will not return to me empty, but will accomplish what I desire and*

achieve the purpose for which I sent it." The Bible records God's words, everything we need to know in order to be saved and live the Christian life. Second Peter 1:3 declares, "His divine power has given us everything we need for life and godliness through our knowledge of Him who called us byhis own glory and goodness."

Second, God speaks through impressions, events, and thoughts. God helps us to discern right from wrong through our consciences (1 Timothy 1:5 1 Peter 3:16). God is in the process of conforming our minds to think His thoughts (Romans 12:2). God allows events to occur in our lives to direct us, change us, and help us to grow spiritually (James 1:2-5; Hebr.12:5-11). 1Peter 1:6-7 reminds us, "In this you greatly rejoice, though now for a little while you may have had to suffer grief in all kinds of trials. These have come so that your faith—of greater worth than gold, which perishes even though refined by fire—may be proved genuine and may result in praise, glory and honor when Jesus Christ is revealed."

Finally, God may sometimes speak audibly to people. It is highly doubtful, though, that this occurs as often as some people claim it does. Again, even in the Bible, God speaking audibly is the exception, not the ordinary. If anyone claims that God has spoken to him/her, always compare what is said with what the Bible says. If God were to speak today, His words would be in full agreement with what He has said in the Bible (2 Timothy 3:16-17). God does not contradict Himself.

*சென்ற மாத தொடர்ச்சி :*

## முந்தின நற்குணத்தை பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமம்

### தேவனில் நிலைத்திருந்து அவர் பாதத்தை பற்றிக் கொண்டாள்:

ரூத் கோதுமை வாற்கோதுமை அறுப்பு நாட்கள் முடியும் வரை வேறு வயலுக்கு போகாமல் போவாசுடைய வயலில் அவன் வேலைகாரிகளோட கூடியிருந்தாள்(ரூத்:2:23). நம் சோதனை காலம் ஒரு குறிப்பிட்ட காலம் தான் என்பதை முதலாவது நாம் உணர்ந்து அவரில் உண்மையாய் நிலைத்திருப்போம். நம் திராணிக்கு மேலாக சோதிக்கப்பட ஒரு நாளும் விட மாட்டார். தேவனிடத்தில் தயவை பெற்றுக்கொண்ட ரூத் தேவ ஜனத்தோடே கூடி தேவனோடுள்ள உறவில் நிலைத்திருந்தாள் தேவன் உலகப் பிரகாரமாய் மட்டுமல்ல ஆவிக்குரிய ஆசீர்வதங்களினாலும் நம்மை நிரப்புவார்.

சுதந்தரவாளியாகிய போவாஸை சுதந்தரிக்க தன் மாமியார் கொடுத்த ஆலோசனைக்கு கீழ்படிகிறாள். நகோமியின் ஆலோசனைப்படி ரூத் குளித்து எண்ணெய் பூசி வஸ்திரம் உடுத்தி கொண்டு போவாஸின் போர்வையை ஒதுக்கி அவன் பாதத்தண்டையிலே படுத்து கொண்டாள்(ரூத்:3:1-9). அப்பொழுது போவாஸ் ரூத்திடம் “மகளே, நீ **கர்த்தரால்** ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது. இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடி யெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்” என்றான் (ரூத்:3:10,11).

ஆவிக்குரிய பிரகாரமாக நாம் பார்க்கும் போது தம்முடைய சுதந்தரர் இயேசு கிறிஸ்துவை பற்றி கொள்ளுகிறாள். அவள் பாவ வாழ்க்கையிலிருந்து முற்றிலும் விலகி ஞானஸ்நானத்தினால் தன்னை கழுவி சுத்திகரித்து தேவனுடைய நீதியை நிறைவேற்றுகிறாள். பரிசுத்த ஆவி என்னும் எண்ணெய் பூசி, நீதியின் வஸ்திரத்தை உடுத்தி கிருபையின் போர்வையினால் போர்த்திக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் பாதத்தை பற்றிக் கொள்ளுகிறாள். வேதம் கூறுகிறது மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்து கொள்ளுங்கள் (எபேசியர்:5:24). தேவனுடைய பாதத்தை பற்றிக் கொண்டோர் மேலான ஆசீர்வாதத்தை பெற்றனர். இயேசுவின் பாதத்தில் அமர்ந்த மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்.இயேசுவின் பாதத்தில் பரிமள தைலம் உற்றிய மரியாள் உயிர்தெழுந்த இயேசுவை முதலாவது தரிசித்ததையும் நாம் அறிவோம். ரூத் தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகவில்லை. ஏனென்றால் ஐசுவரியம் தேவனை மறுதலிக்க செய்யும் என்பதை அறிந்திருந்தாள். (நீதிமொழிகள்:30:8). ரூத் சுதந்தரராகிய தேவனுடைய பாதத்தை மாத்திரம் பற்றிக் கொண்டபடியால் அவள் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமமாயிருந்தது.

**<u>தேவனுடைய சுதந்தரமாக மாறுகிறாள்</u>**

போவாஸ் நகோமிக்கு உண்டான யாவற்றையும் ரூத்தையும் மீட்டு கொள்ளுகிறான். போவாஸை விட நெருங்கின சுதந்தரவாளி ஒருவன் இருந்தும் அவன் மீட்டு கொள்ளவில்லை(ரூத்:4:3-10). போவாஸ் ரூத்தை மீட்டு அவளை விவாகம் பண்ணினான். அப்பொழுது ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் அவனை நோக்கி: உன் வீட்டிலே வருகிற

மனைவியைக் **கர்த்தர்** இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும் லேயாளைப் போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக. இந்தப் பெண்ணி டத்திலே **கர்த்தர்** உனக்கு அருளிச் செய்யப் போகிற சந்தானத்தினாலே, உன் வீடு தாமார் யூதாவுக்குப் பெற்ற பேரேசின் வீட்டைப்போல ஆகக்கடவது என்றார்கள். ரூத் போவாசுக்கு ஓபேத் என்னும் குமாரனைப் பெற்றாள். ஓபேத் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்(ரூத்:4:11-22).

ஆவிக்குரிய அர்த்தத்தில் ரூத் தேவனை உறுதியாய் பற்றி கொண்டபடியால் மீட்பை பெற்றாள். ரூத்தின் நெருங்கின சுதந்தரவாளி சுத்த மனசாட்சியும் அன்பும் இல்லாமல் கட்டளைகளை மட்டும் செயல்படுத்தும் நியாயப்பிரமா ணத்தை குறிக்கிறது. நியாப்பிரமானம் நமக்கு மீட்பை பெற்று தர முடியவில்லை. ஏனென்றால் இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. போவாஸ் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை பிரதிபலிக்கிறார். போவாஸ் அன்பினால் நியாய பிரமாணத்தை நிறைவேற்றுகிறார். இயேசு கிறிஸ்து நம்மேல் அன்புகூர்ந்து தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தை நமக்காக சிந்தி விலைக்கிரயம் செலுத்தி புறஜாதிகளாய் இருந்த நம்மை அவருடைய சொந்த ஜனமாகவும், சுதந்த ரராகவும் தெரிந்தெடுத்தார்.

எவ்வளவு பெரிய மகத்தான அன்பு. தேவனோடு உறவு இல்லாமல் இருந்த மோவாபிய பெண்ணான ரூத் இப்பொழுது தேவனுடைய பிள்ளையாக அதாவது சுதந்தரராக மாறுகிறாள். புறஜாதிப் பெண்ணாய் இஸ்ரவேலுடைய காணியாட்சிக்கு புறம்பானவளும் வாக்குத் தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியருமாயிருந்த ரூத் தேவனை ஏற்றுக் கொண்டு அவருடைய பாதத்தை பற்றிக் கொண்ட போது இஸ்ரவேல் குடும்பத்தின் ஆசீர்வாதங்களை சுதந் தரித்துக் கொள்ளுகிறாள். உடைக்கப்பட்ட பாத்திரமான ரூத் ஆசீர்வாதமான பாத்திரமாய் மாறினாள். கைவிடப் பட்டு புருஷனும் சந்தானமும்

இல்லாமல் இருந்த ரூத்தை தேவன் இயேசு கிறிஸ்துவின் சந்ததியை கட்டுவிக்க உபயோகப்படுத்தினார். சிறுமை பட்டிருந்த ரூத் எவ்வளவாய் உயர்த்தப்பட்டாள் பாருங்கள்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!! செழிப்பை தேடி தேவனை ஆராதிக்கிற தேவ பிரசன்னம் நிறைந்த பெத்லேகேமை விட்டு பாவம் நிறைந்த மோவாப் சென்ற நகோமி கணவன் பிள்ளைகள் எல்லாவற்றையும் இழந்து கசப்பான வாழ்வை கண்டு கொண்டாள். ஆனால் பாவமான மோவாபை விட்டு மாமியார் நகோமியோடு தேவ பிரசன்னம் நிறைந்த பெத்லேகேம் வந்த ரூத்தின் வாழ்க்கை ஆசீர்வாதமாய் மாறியது. நாமும் கூட நம்மை நிதானித்து ஆராய்ந்து பார்போம். தேவனுக்கும் நமக்கும் பிரிவினை உண்டாக்குகிற எந்த பாவமாயினும் அதை இன்றே விட்டு விட்டு தேவனோடு கிட்டி சேர்ந்து அவர் சமூகத்தில் எப்போதும் நிலைத்திருப்போம், தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுவோம். புறஜாதிகளும் விருத்தசேதனமில் லாதவர்களும் தேவனற்றவர்களுமாய் இருந்த நம்மையும் விலைக்கிரயம் செலுத்தி மீட்டு சொந்த ஜனமாய் சுதந்தரராய் தெரிந்துகொண்டார்.

நாமும் ரூத்தை போல நம்மை நெருங்கி நிற்கிற பாவத்தையும் உலகத்தின் வழிகளை விட்டு விலகி தேவனை சார்ந்து அவருடைய கிருபை தயை வேண்டி தாழ்மையோடு காத்திருப்போம். அவரில் நிலைத்திருந்து அவருடைய பாதத்தை மாத்திரம் தாழ்மையோடு பற்றிக் கொள்ளும் போது நம்முடைய முத்தின நற்குணத்தை பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமமாய் இருக்கும். நாம் இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்களை வெளிப்படுத்துவதால் நாம் குணசாலி என்பதை நம் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் உடைந்து போன பாத்திரமான நம்மை மீட்டு, நாம் அவர் பலத்த கைக்குள் அடங்கி இருக்கும் போது உபயோகமான

ஆசீர்வாதமான பாத்திரமாய் வனைகிறார் என்பதில் ஐயமில்லை.

தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# Birthday Celebrants in October

"May God's unfailing love and peace bless you today and every day. Prayers and best wishes."

| | | | |
|---|---|---|---|
| 1 | 01-10-2017 | Mrs. Sheeba Derick | 050 667 7528 |
| 2 | 01-10-2017 | Mrs. Fanny Esther | 055 553 5200 |
| 3 | 01-10-2017 | Master. H.Johanna Jane | 055 374 0685 |
| 4 | 04-10-2017 | Master. Antony Lerinson | 055 701 1315 |
| 5 | 05-10-2017 | Mr. Immanuel Suthan | 055 640 0635 |
| 6 | 07-10-2017 | Mr. Sharwin John | 055 260 6580 |
| 7 | 08-10-2017 | Miss. Akila Ravichandran | 056 641 1363 |
| 8 | 09-10-2017 | Mss. D.P.Mercy Prakash | 052 798 0347 |
| 9 | 11-10-2017 | Mr. Prabu Dinesh Kumar | 055 628 1237 |
| 10 | 12-10-2017 | Mr. Arun Jose | 056 946 7109 |
| 11 | 13-10-2017 | Mrs. Anitha George | 055 484 5125 |
| 12 | 15-10-2017 | Miss. Earline Bernice Raj | 050 322 7592 |
| 13 | 15-10-2017 | Mr. Y.Jovin | 055 832 8701 |
| 14 | 17-10-2017 | Mrs. Sahila Grace Justin | 050 573 7096 |
| 15 | 18-10-2017 | Mrs. Helen Hemabai | 056 319 8509 |
| 16 | 20-10-2017 | Mrs. Patricia Shanthi | 056 399 6933 |
| 17 | 20-10-2017 | Master. Aidean derick | 050 667 7528 |
| 18 | 22-10-2017 | Mrs. Sheeba Deva Prakash | 052 798 0347 |
| 19 | 23-10-2017 | Mrs. Biblin Christabel | 050 523 2912 |

| | | | |
|---|---|---|---|
| | | Nelson | |
| 20 | 24-10-2017 | Mr. Justin Oliver | 050 573 7096 |
| 21 | 27-10-2017 | Mr. Jayan Dharmaraj | 055 249 8186 |
| 22 | 31-10-2017 | Master. Eion Jayden | 056 257 8373 |

# *Wedding Anniversaries in October*

| | | | |
|---|---|---|---|
| 1 | 05-10-2017 | Mr. Ravindra<br>Mrs. Sunitha Ravindra | 056 885 2900 |
| 2 | 21-10-2017 | Mr. Prabu Dinesh Kumar<br>Mrs. Rebecca | 055 628 1237 |

**Worship Timings – September 2017**
**Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain.**

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

**REGULAR MINISTRIES @ PERSONAGE - Jahili**

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Fridays | 07.00 PM | Gospel Ministry ( Camp visit) |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |

# Daily Bible Reading – October 2017

**"Your word is a lamp to my feet and light for my path"**

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Sun | Ephesians 1 | 1 Kings 1 |
| 2 | Mon | Ephesians 2 | 1 Kings 2 |
| 3 | Tue | Ephesians 3 | 1 Kings 3-4 |
| 4 | Wed | Ephesians 4 | 1 Kings5 |
| 5 | Thu | Ephesians 5 | 1 Kings 6 |
| 6 | Fri | Ephesians 6 | 1 Kings 7 |
| 7 | Sat | Philippians 1 | 1 Kings 8 |
| 8 | Sun | Philippians 2 | 1 Kings 9 |
| 9 | Mon | Philippians 3 | 1 Kings 10 |
| 10 | Tue | Philippians 4 | 1 Kings 11 |
| 11 | Wed | Colossians 1 | 1 Kings 12 |
| 12 | Thu | Colossians 2 | 1 Kings 13 |
| 13 | Fri | Colossians 3 | 1 Kings 14 |
| 14 | Sat | Colossians 4 | 1 Kings 15 |
| 15 | Sun | 1 Thessalonians 1 | 1 Kings 16 |
| 16 | Mon | 1 Thessalonians 2 | 1 Kings 17 |
| 17 | Tue | 1 Thessalonians 3 | 1 Kings 18 |
| 18 | Wed | 1 Thessalonians 4 | 1 Kings 19 |
| 19 | Thu | 1 Thessalonians 5 | 1 Kings 20 |
| 20 | Fri | 2 Thessalonians 1 | 1 Kings 21 |
| 21 | Sat | 2 Thessalonians 2 | 1 Kings 22 |
| 22 | Sun | 2 Thessalonians 3 | 2 Kings 1 |
| 23 | Mon | 1 Thimothy 1 | 2 Kings 2 |
| 24 | Tue | 1 Thimothy 2 | 2 Kings 3 |
| 25 | Wed | 1 Thimothy 3 | 2 Kings 4 |
| 26 | Thu | 1 Thimothy 4 | 2 Kings 5 |
| 27 | Fri | 1 Thimothy 5 | 2 Kings 6 |
| 28 | Sat | 1 Thimothy 6 | 2 Kings 7 |
| 29 | Sun | 2 Thimothy 1 | 2 Kings 8 |
| 30 | Mon | 2 Thimothy 2 | 2 Kings 9 |

# ஜெபிப்போம்!!!

- ஆயர், திருச்சபைக்காரியக்குழு, திருச்சபை உறுப்பினர்களுக்காக
- இந்தியாவிலும் , ஐக்கிய அரபுக் குடியரசிலும் நம்மை ஆளும் தலைவர்களுக்காக
- உலகத்திருச்சபைகளுக்காக சிறப்பாக ஐக்கிய அரபுக் குடியரசு மற்றும் வளைகுடா பகுதியிலுள்ள அனைத்து திருச்சபைகளுக் காகவும் , ஊழியங்களுக்காகவும்
- நமது தென் இந்திய திருச்சபைக்காகவும், தென் இந்திய திருச்சபையின் பிரதம பேராயர் மற்றும் அனைத்து பேராயர்கள், ஆயர்கள், ஊழியர்களுக்காகவும்
- நம் திருச்சபையின் இதர ஊழியங்களுக்காக
- 10-11-2017 அன்று நடை பெற இருக்கும் நமது திருச்சபையின் அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகைக்காக
- இம்மாதத்தில் நடைபெறும் எல்லா ஆராதனைகளையும் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்திட
- புதிய அங்கத்தினர்களை தேவன் நம் சபைக்கு தருமாறு
- நம் திருச்சபையின் அங்கத்தினர் அனைவருக்காகவும் நம் குடும்பங்களை ஆண்டவர் ஆசீர்வதிக்கவும் ஆண்டவரால் பத்திரமாக பாதுகாக்கப்படவும்
- விசாவுக்காக, வேலைக்காக, ஊதியத்திற்காக காத்திருக்கும் மக்களுக்கு ஆண்டவர் சரியான நேரத்தில் அவைகளை வழங்கும் படியாக
- தங்கள் பெற்றோர், மனைவி, பிள்ளைகளை விட்டு கேம்ப்களில் தங்கியிருக்கும் நம் அன்பு சகோதரர்களுக்காகவும் அவர்களின் பெற்றோர், மனைவி பிள்ளைகள் , சகோதர சகோதரிகள் அனைவருக்காகவும்
- இந்தியாவிலிருக்கும் நமது பெற்றோர் மற்றும் நமக்குரியவர்கள் அனைவருக்காகவும்
- நமது திருச்சபையால் தாங்கப்பட்டு வரும் நமது மிஷனரிகளான **திரு.சூரியபால் சதா, திரு. கிறிஸ்டோபர்** அவர்களையும் அவரது குடும்பம் மற்றும் ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்திட ஜெபிப்போம்.